## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**கணிதம் - தரம் 05 / இரண்டாந் தவணை – வாரம் 3**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

❖ பணம் – சார்ந்த எளிய கணித்தல்களைச் செய்வார்.

ஒரு பொருளை/ சில பொருள்களைக் கொள்வனவு செய்து பணம் செலுத்திய பின் கிடைக்கும் மீதிப் பணத்தைக் கணிப்பார்.

❖ பெற்றாரின் கவனத்திற்கு : நாணயத்தாள்களையும், நாணயக்குற்றிகளையும் பிள்ளைக்கு காட்டுக. நாணயக்குற்றிகள் : 25 சதம், 50 சதம், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய்

நாணயத்தாள்கள் : 20 ரூபாய், 50 ரூபாய், 100 ரூபாய், 500ரூபாய், 1000 ரூபாய், 5000ரூபாய்

1). மீதிப் பணத்தைக் கணித்தல்.

| பொருள் | விலை<br>ரூபாய் சதம் |
|---|---|
| பென்சில் | 12.00 |
| பென்சில் சீவி | 10.00 |
| பேனை | 15.00 |
| பயிற்சிக் கொப்பி | 35.00 |
| வரைதல்கொப்பி | 45.00 |
| புத்தகப்பை | 375.00 |
| நிறப்பென்சில் பெட்டி | 58.00 |
| அடிமட்டம் | 15.00 |
| நிறப்பெட்டி | 89.00 |
| புத்தக உறை | 12.00 |
| பென்சில் பெட்டி | 35.00 |
| அழிறப்பர் | 8.00 |
| தண்ணீர் பேத்தல் | 100.00 |

உ+ம் – வரைதல் கொப்பி ஒன்றும் பென்சில் சீவி ஒன்றும் வாங்கிக் கொண்டு ரூபாய்100 காசுத்தாளைக் கொடுத்தால் மீதிப்பணம் எவ்வளவு?

| | | | ரூபாய் | சதம் |
|---|---|---|---|---|
| வரைதல் கொப்பி | 1 | = | 45 | . 00 |
| பென்சில் | 1 | = | 10 | . 00 |
| | | | 55 | . 00 |
| கொடுத்த பணம் | | = | 100 | . 00 |
| இரண்டு பொருள்களின் விலை | | = | 55 | . 00 |
| மீதிப்பணம் ரூபாய் | | = | 45 | . 00 |

❖ **மீதிப்பணத்தைக் கொடுக்கும் போது முன்னோக்கி எண்ணும் திறனை வளர்க்க.**

2). பிரசினம் தீர்ப்போம்.

i). பேனை ஒன்றும் பயிற்சிக் கொப்பிகள் இரண்டும் பெற்றுக் கொண்டு ரூபாய் 100 நாணயத்தாளைக் கொடுத்தால் பெறும் மீதிப்பணம் எவ்வளவு? ............................

ii). புத்தகப்பை ஒன்றும் தண்ணீர் போத்தல் ஒன்றும் வாங்கிய ஒருவர் 500 ரூபாய் நாணயத்தாள் ஒன்றைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? ..........................

iii). வரைதல் கொப்பி, நிறப்பெட்டி, பென்சில், அழிறப்பர் ஒவ்வொன்று வீதம் வாங்கிய ஒருவர் 100 ரூபாய் நாணயத்தாள்கள் இரண்டைக் கொடுத்தால் மீதிப்பணம் எவ்வளவு? ................

iv). பயிற்சிக் கொப்பிகள் ஆறும் பேனைகள் இரண்டும், பென்சில் பெட்டி ஒன்றும் வாங்கிய பிள்ளை 500ரூபாய் நாணயத்தாளைக் கொடுத்தால் மீதிப்பணம் எவ்வளவு? .......................

v). மேல் தரப்பட்டுள்ள விலைப்பட்டியலிலுள்ள சகல பொருட்களையும் வாங்கிய ஒருவர் 1000 ரூபாய் நாணயத்தாள் ஒன்றைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?
..........................................